# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# 11 - ஆம் வகுப்பு --- கணக்குப்பதிவியல் ( 2019 )

## சிறுதேர்வு

UNIT 1 - 8

### ஒருமதிப்பெண் வினாக்கள்

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
   அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்பு நிலைக் குறிப்பு ஈ) பேரேடு
2. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது
   அ) நடவடிக்கைகளை முறையாகப்பதிவு செய்தல்
   ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
   இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
   ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்
3. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மைய வங்கி
   ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   இ) உச்சநீதி மன்றம்
   ஈ) இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்
4. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
   அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
   இ) ஒரு பருவகாலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை
5. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
   இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு
6. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
   இ) கணக்கியல் காலஅனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
7. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்
8. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்?
   அ) பற்பல கடனீந்தோர்கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
   இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு
9. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப்பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
   அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்
   இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்
10. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு
    அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு
    இ) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு





11. நிதித் தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
    அ) கடனீந்தோர் ஆ) பணியாளர்
    இ) வாடிக்கையாளர் ஈ) அரசு
12. கணக்கியல் சமன்பாடு குறிப்பது
    அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது
    ஆ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது
    இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது
    ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது
13. பின்வரும் எந்தமுறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது?
    அ) இருப்பு முறை
    ஆ) மொத்தத் தொகை முறை
    இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை
    ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)
14. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப்பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது
    அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் ஆ) ஒரேகணக்கில், வெவ்வேறு தேதிகளில்
    இ) ஒரேகணக்கின் இரு பக்கங்களில் ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்
15. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்
    அ) ரொக்க ஏடு ஆ) பேரேடு
    இ) உரிய குறிப்பேடு ஈ) கொள்முதல் ஏடு
16. பின்வருனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார்கணக்கு எது?
    அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபடவேண்டிய சம்பள கணக்கு
    இ) மகேஷ் கணக்கு ஈ) பாலன் நிறுவனம்
17. கணக்கியல் சமன்பட்டின்படி சரியாக இல்லாதது.
    அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
    இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்
18. வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது.
    அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்
    ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
    இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்
    ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
19. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு
    அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம்
    இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு
20. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹. 60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல்__________
    அ) ₹. 1,60,0 ஆ) ₹. 60,000 இ) ₹. 1,00,000 ஈ) ₹. 40,000
21. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
    அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
    இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

22. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்
இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

23. இருப்பாய்வு என்பது ஒரு
அ) அறிக்கை ஆ) கணக்கு
இ) பேரேடு ஈ) குறிப்பேடு

24. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

25. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்
அ) குறிப்பேடு ஆ) நாளேடு
இ) இருப்பாய்வு ஈ) இருப்பு நிலைக்குறிப்பு

26. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்கஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லறை ரொக்க ஏடு

27. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

28. நிலைச் சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்யவேண்டிய ஏடு
அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

29. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?
அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது
இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
ஈ) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும்போது மூன்று நாட்கள் சலுகைநாட்களாகக் கூட்டப்படுகின்றன.

30. ரொக்க ஏடு பதிவு செய்வது
அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

31. முப்பத்தி ரொக்க ஏட்டில், முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கி மேல்வரைப் பற்றின் இருப்பு தோன்றுவது
அ) ரொக்கப் பத்தி பற்றுப்பக்கம் ஆ) ரொக்கப் பத்தி வரவுப்பக்கம்
இ) வங்கிப் பத்தி பற்றுப்பக்கம் ஈ) வங்கிப் பத்தி வரவுப்பக்கம்

32. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்கஏட்டில் பதிந்தால், அது
அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப்பதிவு
இ) ஒற்றைப்பதிவு ஈ) சாதாரணப்பதிவு





33. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க ஈ) மூலப்பொருட்கள் வாங்க

34. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?
அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

35. பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?
அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது
ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது
இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

36. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது.
அ) வங்கியரால் ஆ) வணிகத்தால்
இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

37. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹. 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக்கட்டணம் ₹. 50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?
அ) ₹. 1,950 வரவு இருப்பு ஆ) ₹. 1,950 பற்று இருப்பு
இ) ₹. 2,050 பற்று இருப்பு ஈ) ₹. 2,050 வரவு இருப்பு

38. வங்கி அறிக்கை என்பது
அ) ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்தியின் நகல்
ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்
இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

39. இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ₹. 200 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?
அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார்
ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்
இ) ஏதேனும் பற்று இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்
ஈ) ஏதேனும் வரவு இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

40. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
அ) நிதி நிலைமையைஅறிய
ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

## விடைகள்

1. இ) இருப்பு நிலைக் குறிப்பு
2. ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்
3. ஈ) இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்
4. ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
5. ஆ) ரொக்கக் கணக்கு
6. ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
7. ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
8. இ) எடுப்புகள் கணக்கு
9. ஈ) இருப்புக் கட்டுதல்
10. ஈ) சில்லறை ரொக்க ஏடு
11. ஆ) பணியாளர்
12. ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது
13. ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)
14. அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்
15. இ) உரிய குறிப்பேடு
16. ஆ) கொடுபடவேண்டிய சம்பள கணக்கு
17. இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்
18. ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
19. இ) ஒரு சொத்து
20. ஈ) ₹. 40,000
21. ஆ) பற்று இருப்பு
22. ஆ) எடுத்தெழுதுதல்
23. அ) அறிக்கை
24. ஈ) அனைத்து கணக்குகளும்
25. இ) இருப்பாய்வு
26. இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி
27. ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
28. ஈ) உரிய குறிப்பேடு
29. இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
30. இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும்
31. ஈ) வங்கிப் பத்தி வரவுப்பக்கம்
32. அ) எதிர்ப்பதிவு
33. அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள்
34. ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
35. ஈ) ரொக்கஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது
36. ஆ) வணிகத்தால்
37. அ) ₹. 1,950 வரவு இருப்பு
38. இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
39. ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்
40. ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய